Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 288

சனிக்கிழமை
10 செப்ரெம்பர் 2022

ஆவணி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50



முசந்தி முரளி

"பொம்மையைக்காட்டி குழந்தையளைப் பேய்க்காட்டுற மாதிரி உவைக்கு ரணில் பதவியைக் குடுத்து ஏமாத்தியிருக்கிறார் போல"

## கந்தர்மடத்தில் விபத்து: 32 வயது இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், செப்.10
யாழ்ப்பாணம், கந்தர் மடம் சந்தியில் நேற்று முன்தினம் இரவு நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் 10 ➤

## நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படுவது நிச்சயம்

### விஜயதாஸ ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப்.10
தமிழ்மக்களின் அனைத்துப்பிரச்சினைகளுக்கும் ஓர் ஒழுங்குமுறையில் தீர்வுகளைக் காணும் பணியை எமது அரசு முன்னெடுக்கும். ஜனாதிபதி ரணில் 10 ➤




சிறிலங்கா அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிராகவும் காலிமுகத் திடலில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-எ-இ)

## பறந்தார் பஸில்

கொழும்பு, செப்.10
முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நேற்றுக் காலை அமெரிக்காவுக்குப் 10 ➤

# போர்க்குற்றச்சாட்டுக்களை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!



### ஜெனிவா சென்றுள்ள நீதியமைச்சர் திட்டவட்டம்
### ஐ.நா. பொறுப்புடன் நடக்கவேண்டுமாம்
### பச்லெட்டின் ஆலோசனைகளும் புறக்கணிப்பு

**கொழும்பு, செப்ரெம்பர் 10**

இலங்கை மீது எந்தவொரு தரப்பினரும் போர்க்குற்றச்சாட்டை முன்வைக்கமுடியாது. அதையும் மீறி எமது நாடு மீது போர்க்குற்றச்சாட்டை முன்வைத்தால் அதை ஏற்க நாம் தயாரில்லை. 11 ➤

## பெயரளவுப் பதவிகளால் பெரமுனவினர் ஏமாற்றம்

கொழும்பு, செப்.10
இராஜாங்க அமைச்சர்களுக்குரிய பல்வேறு வரப்பிரசாதங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நிறுத்தப் 10 ➤

### யாழ்.பல்கலையில்

## முகாமைத்துவ மாணவருக்கு விசேட போக்குவரத்துச் சேவை

யாழ்ப்பாணம், செப்.10
யாழ்ப்பாணம்பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவர்களுக்காக வட பிராந்திய போக்குவரத்துச் சபை எதிர்வரும் 12ஆம் திகதி 10 ➤

## கோத்தாபய பிரதிவாதி: உயர்நீதிமன்று அனுமதி

கொழும்பு, செப்.10
திருகோணமலை எண்ணெய் தாங்கி ஒப்பந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை 11 ➤

## பதவி கொடுத்த ரணில் பவிசு கொடுக்க மறுப்பு

### இராஜாங்க அமைச்சர்களின் பல வரப்பிரசாதங்கள் "கட்"

கொழும்பு, செப்.10
நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு, பொதுமக்களின் பணத்தை மிகவும் சிக்கன 11 ➤

### பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான

## யூரியூப் ஊடகப் பணியாளர்கள் பிணையில் நேற்று விடுவிப்பு



கொழும்பு, செப்.10
பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த யூரியூப் தமிழ் 11 ➤

## சுகாதாரப் பணிப்பாளர் நியமனம்; வடக்கு ஆளுநருக்குத் தெரியாதாம்

யாழ்ப்பாணம், செப்.10
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ள நிலையில், சுகாதார சேவைகள் 11 ➤

## சந்நிதி தேர்த் திருவிழாவில் 60 பவுண் நகைகள் 'அபேஸ்'

விரிவு பக். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராணி மறைவுக்கு நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, செப். 10
பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவுக்கு இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் அனைத்து பொதுக் கட்டடங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் "மகாராணியின் மறைவு குறித்து பிரிட்டன் அரச குடும்பம் மற்றும் மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு அனுதாபம் தெரிவித்து ஆளும் மற்றும் எதிரணிகள் இணைந்து பிரேரணையொன்றை முன்வைத்து, அதுதொடர்பில் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-44)

## மகாராணி மறைவு:

# செப். 19 ஆம் திகதி தேசிய துக்க தினம்

**கொழும்பு, செப். 10**
**பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவையடுத்து எதிர்வரும் 19ஆம் திகதி தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் நேற்றுமுன்தினம் தனது 96ஆவது வயதில் லண்டனில் மறைந்தார்.

இந்தநிலையில் அவரை நினைவுகூரும் முகமாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு எதிர்வரும் 19ஆம் திகதியை தேசிய துக்கதினமாக அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அன்றைய தினம்வரை இரங்கல் தெரிவிக்கும் வகையில் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றுமாறும் அரச நிறுவனங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையடுத்து கொழும்பு காலிமுகத்திடலில் இலங்கை தேசியக் கொடி நேற்று அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. (ச-இ)



# ஆனந்தகுமாரசுவாமியின் நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 10
கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் 75ஆவது ஆண்டு நினைவுதினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை கடைப்பிடிக்கப்பட்டது.

தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம், யாழ். இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,125,20)

# குறை நிரப்பு வரவு - செலவில் 10 குடும்பங்களுக்கு மலசலகூடம்

## *வலி.தென்மேற்கு சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், செப். 10
குறை நிரப்பு வரவு - செலவுத் திட்டம் மூலம் மலசலகூடமின்றிய பொருண்மியம் நலிந்த 10 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி அமைத்துக்கொடுக்க வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் தவிசாளர் அ. ஜெபநேசன் தலைமையில் பிரதேசசபையின் அமர்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது சேதனப் பசளை மூலம் கிடைக்கப்பெற்ற 15 லட்சம் ரூபா மேலதிக வருமானத்தை 'மலசலகூடம் இல்லாத வீடுகள் இல்லை' எனும் தொனிப்பொருளில் மலசலகூடமின்றிய பொருண்மியம் நலிந்த தெரிவுசெய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு சபைத் தவிசாளரால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்துக்கு சபையின் உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவளித்த நிலையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டம் ஆளுநரின் அனுமதிக்கு அனுப்பிவைக்கப்படும் என சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ச-125)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சதொசவில் குறைப்பு

கொழும்பு, செப். 10
சதொசவில் விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என சதொச தலைவர் தெரிவித்துள்ளார். அதன்படி இறக்குமதி செய்யப்படும் அரிசி, சிவப்புப் பருப்பு, வெள்ளை சீனி மற்றும் உளுந்து ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படவுள்ளன. 210 ரூபாவாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை அரிசி 185 ரூபாவாக விலை குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 200 ரூபாவாக விற்பனை செய்யப்படும் வெள்ளை நாடு கிலோ 194 ரூபாவாகவும் சிவப்பு பருப்பு கிலோ 135 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)





ஈழத்தின் வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றுக் காலை 9 மணிக்கு பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் காவடிகள், பாற்குடங்கள், பிரதிஷ்டை போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ச-20.27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலயத் திருவிழாவில் வாள்வெட்டு; மூவர் காயம்

வவுனியா, செப். 10

வவுனியாவிலுள்ள ஆலயமொன்றில் திருவிழாவின்போது இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி காரணமாக மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியிலுள்ள ஆலயமொன்றிலேயே நேற்று இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை ஆலயத்தில் நின்ற சிலருக்கும் ஆலயப் பகுதிக்குள் நுழைந்த பிறிதொரு குழுவினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக நேற்று இடம்பெற்ற ஆலயத் திருவிழாவில் குறித்த இருபகுதியினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டு வாள்வெட்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த மூவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸாரால் ஆலய நிர்வாகத்தினர் உட்பட 20 பேர் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டதுடன் வாள்களும் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-18)

# திருக்கோணேஸ்வரர் ஆலய காணி சுற்றுலா அபிவிருத்திக்கு சுவீகரிப்பு

## தடுத்து நிறுத்தக் குரல்கொடுப்போம் ஆலய பரிபாலன சபையினர் வலியுறுத்து

**கொழும்பு, செப். 10**



**வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை சுற்றுலா அபிவிருத்திக்கு உள்வாங்குவதற்கு திட்டமிடப்படுகிறது. இந்த ஆக்கிரமிப்புக்கு தொல்பொருள் திணைக்களத்தினரும் கிழக்கு மாகாண ஆளுநரும் ஆதரவளிக்கின்றனர் என ஆலயப் பரிபாலன சபையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.**

இதுதொடர்பில் ஆலயப் பரிபாலன சபையினர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழரின் தொன்மை நிறைந்த பாடல்பெற்ற சிறப்புத் தலமான திருகோணமலை திருக்கோணஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை உல்லாசத்துறை அபிவிருத்தியின் பெயரால் ஆக்கிரமிக்க தொல்பொருள் திணைக்களத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணியை உள்ளீர்க்க திட்டமிடப்படுகிறது.

இதுதொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தினரும், கிழக்கு மாகாண ஆளுநரும் ஆதரவை வழங்குகிறனர்.

எனவே திருக்கோணேஸ்வர ஆலயத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்துத் தமிழ் மக்களும், இந்து மக்களும் குரல்கொடுக்க வேண்டும் - என்றனர். (ச-இ)

# பரீட்சைத் திணைக்கள இணையத்தளம் 'ஹக்'

## மாணவர் கைது!

கொழும்பு, செப். 10

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஹக் செய்த குற்றச்சாட்டில் மாணவர் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். காலியில் உள்ள முன்னணிப் பாடசாலையொன்றில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

மாணவர் பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தை ஹக் செய்து, 2021 க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் தரவுகளை மீட்டெடுத்து, தனியான இணையப் பக்கத்தில் காட்சிப்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறக்குறைய 2 லட்சத்து 70 ஆயிரம் மாணவர்களின் தரவுகளைத் திருடி அவர்களின் பெறுபேறுகளை பரீட்சை திணைக்களத்தின் இணை யத்தளம் போன்ற வேறு ஒரு இணையத்தளத்தில் அவர் காட்சிப்படுத்தியுள்ளார். (ஒ-14,இ)

# பாலியல் வன்முறைக் குற்றவாளிகளை இலங்கை தண்டிக்கத் தவறிவிட்டது!

## 'பேர்ள் ' அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 10

தமிழர்களுக்கு எதிரான மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு இலங்கை தவறிவிட்டது. இவ்வாறு அமெரிக்கா 'பேர்ள்' அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை அரசாங்கம் எவ்வாறு தண்டிக்க தவறிவிட்டது என்பதை பேர்ள் அமைப்பு புதிய அறிக்கையில் ஆராய்ந்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறை உட்பட ஏனைய சர்வதேசக் குற்றங்கள் இடம்பெற்றன என்பதற்கான நம்பகத்தன்மை மிக்க ஆதாரங்கள் உள்ள போதிலும் குற்றவாளிகளுக்கு எதிராக இலங்கை சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை. பாலியல் பலாத்காரத்திலிருந்து உயிர் தப்பியவர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்குள்ளானவர்களின் குடும்பத்தவர்கள் அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதிமன்றங்களிடமிருந்து அரிதாகவே நீதியைப் பெற்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழர்களைக் காட்டிலும் பாதுகாப்புப் படையினரையே விசேடமாக பாதுகாக்க நினைக்கும் இலங்கையின் ஜனாதிபதிகளின் முன்மாதிரியை நீதிமன்றங்கள் பின்பற்றுகின்றன. அதிகளவு இராணுவமயப்படுத்தப்பட்ட சூழலில் வாழும் தமிழ் யுவதிகள் பாலியல் வன்முறை, துஷ்பிரயோகம், துன்புறுத்தல் போன்ற ஆபத்தை அதிகம் எதிர்கொள்கின்றனர்.

போருடன் தொடர்புடைய பாலி யல் வன்முறைகள் மற்றும் ஏனைய குற்றங்களை விசாரணை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகவில்லை - என்றுள்ளது. (ஒ-14,இ)

# தடை செய்யப்பட்ட மதுபான விற்பனை; நபரொருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 10

தடை செய்யப்பட்ட மதுபானத்தை விற்பனை செய்த நபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தடைசெய்யப்பட்ட மதுபானத்தை நபரொருவர் விற்பனை செய்கின்றார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் தடைசெய்யப்பட்ட 180 மில்லிலீற்றர் மதுபானத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 25 வயதான நபரை கைது செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,23)

# ஜெனரேட்டர் இயந்திரத்துக்கும் 'கியூ.ஆர்' மூலம் எரிபொருள்

கொழும்பு, செப். 10

ஜெனரேட்டர்கள், புல்வெட்டும் கருவிகள் மற்றும் பிற உபகரணங்கள் போன்ற வாகனங்கள் அல்லாத வகைகளுக்கும் 'கியூ.ஆர்' குறியீட்டு முறை மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது என்று இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையம் நேற்று அறிவித்துள்ளது.

அதற்கமைய பதிவு செய்யும் முறைகள் தொடர்பான விவரங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சால் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையம் கூறியுள்ளது. (ஒ-14,இ)

# 1 லட்சம் பனம் விதை நடுகை

யாழ்ப்பாணம், செப். 10

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 98 ஆம் அணி முன்னெடுக்கும் 1 லட்சம் பனம் விதை நடும் செயற்றிட்டம், இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்கு வல்லிபுரக்கோயிலை அண்டிய பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரியின் 98 ஆம் ஆண்டு அணியின் புலம்பெயர், உள்ளூர் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ-14)

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு

# யாழ். பல்கலையில் ஆதரவு நிலையம்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஆதரவு நிலையம் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக கலைப்பீட கட்டடத் தொகுதியின் கீழ்த்தளத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவால் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஆதரவு நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவையடுத்து பிரிட்டன் மக்கள் லண்டனிலுள்ள பக்கிங்ஹாம் அரண்மனையின் முன் ஒன்றுதிரண்டு மலர்க்கொத்துக்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (ச-இ)

# வைரம் பதித்த கிரீடம் ராணி கமிலா வசம்



லண்டன், செப். 10

பிரிட்டன் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட கோஹினூர் வைரத்தால் செய்யப்பட்ட கிரீடம் புதிய ராணி கமிலா வசம் செல்கிறது.

இங்கிலாந்து ராணியின் கிரீடம் மிகவும் பிரபலம் ஆகும். இந்தக் கிரீடம் விலை மதிப்பற்ற 2 ஆயிரத்து 800 வைரக்கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிரீடத்தின் மையத்தில், 21 கிராம் எடை கொண்ட 105 கரட் கோஹினூர் வைரம் பொருத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் கோஹினூரில் எடுக்கப்பட்ட இந்த வைரம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1851ஆம் ஆண்டு ராணி விக்டோரியாவுக்காக இங்கிலாந்து கொண்டு செல்லப்பட்டது. அந்த வைரம் 1937 முதல் இங்கிலாந்து ராணியின் கிரீடத்தை அலங்கரிக்கிறது.

இந்தக் கிரீடம் இங்கிலாந்தின் ராணியாக இருந்த 2ஆம் எலிசபெத்தின் வசம் இருந்து வந்த நிலையில் அவரின் மறைவையடுத்து தொடர்ந்து எலிசபெத்தின் மூத்த மகன் சார்ள்ஸ் இங்கிலாந்தின் புதிய ராஜாவாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சார்ல்ஸ் புதிய ராஜாவானதை தொடர்ந்து அவரது மனைவி கமிலா ராணியாகியுள்ளார். இதன் மூலம் கோஹினூர் வைரம் பொருத்தப்பட்ட கிரீடம் கமிலா வசம் செல்கிறது. (ச-இ)

## மகாராணி எலிசபெத் மறைவு:
# புதிய ராஜா சார்ள்ஸ் ராணியாக கமிலா



லண்டன், செப். 10

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவையடுத்து இங்கிலாந்தின் புதிய ராஜாவாக இளவரசர் 3ஆம் சார்ள்ஸ் அரியணை ஏறவுள்ளார்.

சார்ள்ஸ் பிலிப் அர்தூர் ஜார்ஜ் என்ற இயற்பெயர் கொண்ட 73 வயதான 3ஆம் சார்ள்ஸ், மறைந்த 2 ஆம் எலிசபெத்தின் மூத்த மகன் ஆவார்.

இங்கிலாந்து மகாராணி 2ஆம் எலிசபெத் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என பக்கிங்காம் அரண்மனை அறிவித்தது.

இதனையடுத்து இங்கிலாந்து நாட்டின் அரச குடும்ப வழக்கப்படி இங்கிலாந்தின் புதிய ராஜாவாக இளவரசர் 3ஆம் சார்ள்ஸ் அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் அரியணை ஏறும் விழா விரைவில் நடைபெறவுள்ளது.

இவர் தனது முதலாவது மனைவியான இளவரசி டயானாவை 1996 ஆம் ஆண்டில் விவகாரத்து செய்தார். 1997இல் வீதி விபத்தொன்றில் சிக்கி டயானா உயிரிழந்தார்.

அதனையடுத்து 2005ஆம் ஆண்டு கமிலா என்பவரை சார்ள்ஸ் 2ஆவது திருமணம் செய்தார்.

இங்கிலாந்தின் புதிய ராஜாவாக சார்ள்ஸ் அரியணை ஏறவுள்ள நிலையில் ராணியாகும் வாய்ப்பு கமிலாவுக்குக் கிட்டியுள்ளது. (ச-இ)

# மகாராணி உடலுக்கு 10 நாள்கள் அஞ்சலி

லண்டன், செப். 10

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவையடுத்து இங்கிலாந்தில் 10 நாள்கள் துக்கதினமாக அனுட்டிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் ராணி எலிசபெத் உடல் உலக தலைவர்களதும், பொதுமக்களதும் அஞ்சலிக்காக 10 நாள்கள் லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் அரங்கில் வைக்கப்படவுள்ளது.

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் தனது 96ஆவது வயதில் உடல்நலக்குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் மறைந்தார்.

மகாராணி எலிசபெத் மறைவுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ராணி எலிசபெத்தின் உடல் நல்லடக்க நிகழ்வு 10 நாள்கள் நடைபெற்று 10ஆவது நாள் அரண்மனையில் இருந்து ராணியின் உடல் பிரமாண்டமான ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மகாராணி எலிசபெத் மறைவு; உலகத்தலைவர்கள் அஞ்சலி



லண்டன், செப். 10

தனது 96வது வயதில் காலமான இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத்துக்கு உலகத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ராணி இரண்டாம் எலிசபெத்தின் ஆழ்ந்த கடமை உணர்வு, கடினமான சூழ்நிலைகளை தாங்கும் வலிமை மற்றும் அவருடைய நகைச்சுவைத் திறன், இரக்க குணம் ஆகியவை குறித்து நெகிழ்ச்சிப் பதிவுகளை இட்டு இரங்கல்களை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

'அன்பான மனம் படைத்த ராணி என்றும் அவர் 'பிரான்ஸின் நண்பர்' என்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் அஞ்சலித்துள்ளார்.

'இரக்கம், சீரிய பண்பு மற்றும் அயராத உழைப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட ஆட்சி மூலம் இந்த உலகைக் கவர்ந்தவர்' என்று, அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

'அரசி என்பதற்கும் மேலாக அவர் ஒரு யுகத்தை வரையறுத்தவர்' என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

'மாட்சிமை பொருந்திய ராணியின் பெருந்தன்மையான நட்பு, பெரும் அறிவுத்திறன் மற்றும் வியக்கத்தக்க நகைச்சுவை உணர்வை ஒரு போதும் மறக்கமாட்டேன்' என முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

'சிக்கலான உலகில் அவருடைய நிலையான அன்பு மற்றும் தன் முடிவுகளில் உறுதி ஆகியவற்றால் நம் அனைவரையும் ஆற்றுப்படுத்தியவர்' என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.

'ஏழு தசாப்தங்கள் நீடித்த ஆளுகை, 15 பிரதமர்கள் மற்றும் நவீன வரலாற்றில் பல முக்கியமான திருப்புமுனை' 'அவருடைய கனிவு மற்றும் அன்பை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்' என இந்தியப் பிரதமர் மோடி ருவீட் செய்துள்ளார். (ச-இ)

# பாகிஸ்தானில் மழை வெள்ளம் மொகஞ்சதாரோவுக்கு ஆபத்து

லாகூர், செப். 10

பாகிஸ்தானில் கடந்த ஜூலை மாதம் ஆரம்பித்த பருவமழையால் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக உலக பாரம்பரிய சின்னமான மொகஞ்சதாரோவுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள னர். பாகிஸ்தானில் என்றுமில்லாதவாறு ஏற்பட்ட கடும் மழையால் நாட்டின் 3இல் ஒரு பங்கு நீரில் மூழ்கியுள்ளது.

இந்தநிலையில் வரலாறு காணாத மழையால் சிந்துசமவெளி நாகரிகத்தின் பண்டைய நகரங்களில் ஒன்றான மொகஞ்சதாரோவுக்கு வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பல்வேறு பெரிய சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இரட்டை நாக்கு

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாக இருக்கின்றது. இந்த அமர்வில் தமிழ்த் தரப்புக்கள் எல்லாம் ஒரே நேர்கோட்டில் பயணிக்கும் வாய்ப்பு அமைந்திருக்கின்றது. இலங்கையை பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசியத் தரப்பின் மூன்று அணிகளும் வலியுறுத்தியுள்ளன. கடந்த காலங்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி – அதாவது கூட்டமைப்பின் பெயரில் சர்வதேச விடயங்களைக் கையாள்பவர்கள் மாத்திரம், பாதுகாப்புச்சபை ஊடாக சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த முடியாது என்று தெரிவித்து, மனித உரிமைகள் பேரவைக்குள் இலங்கை விடயத்தை முடக்கி வைத்திருந்தனர். இம்முறை அவர்களும் பாதுகாப்புச்சபை ஊடாக சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று கோருவதாலேயே தமிழ்த் தேசியத் தரப்பிலுள்ள அணிகள் ஒரே நேர்கோட்டில் பயணிக்கின்றன என்று கூறமுடிகின்றது. ஆனால் இதுதான் அவர்களில் இறுதி நிலைப்பாடா? அல்லது தாம் எடுத்துக் கொண்ட இந்த நிலைப்பாட்டில் – இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றார்களா? என்ற கேள்வியை அவர்களின் செயற்பாடுகள் எழுப்பிநிற்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கூட்டு ஆவணம் அனுப்பும் முயற்சி ரெலோ கட்சியால் முன்னெடுக்கப்பட்டது. இதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும், சிவில் அமைப்புக்கள் பலவும் கையெழுத்திட்டிருந்தன. அதில் பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்தும் நிலைப்பாடு தெளிவாகவும், உறுதியாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் அனுப்பப்பட்டு ஒரு சில நாள்களுக்கு உள்ளேயே அந்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கிய ரெலோ கட்சியினர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தினர். அதில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு கலப்புப் பொறிமுறை பற்றி சாதகமாக பதில்களை வெளிப்படுத்தியுள்ளனர். சர்வதேச நீதிமன்றம்தான் தேவை என்று ஐ.நா. உறுப்பு நாடுகளை வலியுறுத்திவிட்டு அந்தக் கோரிக்கையை பலவீனப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணிலுடன் பேச்சு நடத்தியமை, ரெலோவின் இரட்டை வேடத்தையே வெளிப்படுத்துகின்றது. இதையே அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீகாந்தாவும் சுட்டிக்காட்டியிருந்தார். அதன் பின்னர் ரெலோ வெளியிட்ட ஊடக அறிக்கையில், தமது நிலைப்பாடு சர்வதேச விசாரணைதான் என்றும் அதில் மாற்றம் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.


சர்வதேச விசாரணைதான் ரெலோவின் நிலைப்பாடு, அதில்தான் உறுதியாக இருக்கின்றீர்கள் என்றால், அதை எல்லா இடங்களிலும் பிரதிபலிப்பதுதானே சரியானது. தர்மமும் அதுதானே. இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள் நிலைப்பாடுகள் வேறுபடுமானால், ஒன்றில் அந்த விடயத்தில் உங்களுக்குத் தெளிவில்லை அல்லது சந்தர்ப்பவாத அரசியலை ரெலோ முன்னெடுக்கின்றது என்பதாகவே அர்த்தப்படும். இந்த விடயத்தில் மாத்திரமல்ல, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்விலும் ஒரு தெளிவான நிலைப்பாடு ரெலோவிடம் இல்லை. இந்தியப் பிரதமருக்கு 13ஆம் திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம் பற்றி கடிதம் எழுதினார்கள். ஆனால் பின்னர் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தேவை என்று தம்மைச் சந்தித்த இராஜதந்திரிகளிடம் கூறினார்கள்.

கடந்த காலங்களிலும் அதாவது ஆயுதப் போராட்ட காலத்திலும் இத்தகைய நிலைப்பாடே இழையோடியிருந்தது. தனிநாடு என்று ஆயுதம் தூக்கியவர்கள், கால ஓட்டத்தில் தனிநாடு கோரிப் போராடியவர்களுக்கு எதிராகவும் சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து துப்பாக்கியைத் திருப்பியிருந்தார்கள். பின்னர் மீண்டும் பழைய பாதைக்கு மீண்டதாலேயே கூட்டமைப்பில் புலிகளால் இணைக்கப்பட்டார்கள். இலட்சியம் ஒன்றை வரித்துக் கொண்டால் இறுதிவரை அதிலிருந்து வழுவாமல் இருக்கவேண்டும். நேரத்துக்கு நேரம் நிலைப்பாடுகளை பச்சோந்திபோல மாற்றிக் கொள்ளாமல் உறுதியாகச் செயற்பட இனியாவது முன்வாருங்கள்.



**நாளொரு நல்வார்த்தை**

"ஒரு எதிரியை நண்பனாக மாற்றும் திறன் படைத்த ஒரே சக்தி அன்பு மட்டுமே"
**- மார்ட்டின் லூதர் கிங்**




# ஜனாதிபதி ரணிலின் புதிய நிர்வாகம் மனித உரிமைகளைப் பாதுகாக்காது

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

**கொழும்பு, செப். 10**



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய நிர்வாகம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் உறுதியளிக்கவில்லை என்பதை உணர்த்துகின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களில் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், லொஹான் ரத்வத்தே, சனத் நிஷாந்த ஆகியோர் கடுமையான உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம் சுமத்தப்பட்டவர்கள்.

இந்த நிலையில், மோசமான அமைச்சு நியமனங்கள் மற்றும் அமைதியான எதிர்ப்புக்களுக்கு அதன் கடுமையான பிரதிபலிப்பு, இலங்கையின் உரிமைகள் நிலைமை வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

(ஒ-14,இ)

### பயங்கரவாதச் சட்டத்தை நீக்குக

# வடக்கு – கிழக்கில் இன்றுமுதல் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 10

நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் தொடர் கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு காங்கேசன்துறை வீதி மாவிட்டபுரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அதன்பின்னர் ஊர்தி பவனியாக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று அந்தந்த மாவட்டங்களில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பல வருடங்களாக சிறையனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (ச-இ)

**நாளை**

**11.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**
**ஆவணி 26**

சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம்: 04.33 - 06.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளை எதிர்பார்த்து பதவிகளை ஏற்கவில்லை

## புதிய இராஜாங்க அமைச்சர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 10**

**நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதே எமது எதிர்பார்ப்பு. இதற்கு சலுகைகள் மற்றும் சம்பளம் தேவையில்லை.**

இவ்வாறு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட இராஜாங்க அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. புதிய அமைச்சர்கள் நியமனத்தால் நிறையச் செலவுகள் ஏற்படும் என்று யாராவது நினைக்கலாம்.


எமக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை எமக்குக் கிடைத்த அணிகலனாக நாம் கருதவில்லை. அமைச்சருக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளாமல் எம்.பி.யின் சம்பளத்தை மட்டும் பெற்றுக்கொண்டு செயற்படுவதாக ஜனாதிபதியிடம் நாம் தெளிவாகக் கூறியுள்ளோம்.

எமக்குக் கிடைத்துள்ள அமைச்சுப் பொறுப்பு என்ன என்பதை விட வழங்கப்பட்டுள்ள பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்பதே பிரதானமானதாகும்.

நாட்டுக்கு அரசியல் ஸ்திரத்தன்மை தேவை. அதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் எம்.பி. குழு அவசியமானது. இந்த முடிவால் ஐ.எம்.எப். கடன் தொடர்பிலும் சாதகமான நிலை ஏற்படும். வலுவான அரசாங்கம் இருந்தால் முதலீட்டாளர்களை ஈர்க்கவும் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

சலுகைகளைப் பெற இந்த அமைச்சுப் பொறுப்புக்களை நாம் ஏற்கவில்லை.

நாட்டை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து காப்பாற்றும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு நிபந்தனையின்றி ஆதரவளிப்போம். நாட்டின் பொருளாதாரப் போராட்டத்தை வெற்றி கொள்ள கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவோம் - என்றனர். (ச-22)



கிளிநொச்சி தருமபுரம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஒ-14,113)

*சுகாதார சேவைகள் பணிமனையால்*

# வேரவில் மருத்துவமனைக்கு காவுவண்டி உடன் கையளிப்பு

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி, வேரவில் மக்களது தொடர் கோரிக்கையை அடுத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திலிப் லியனகேயின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வேரவில் மருத்துவமனைக்கு காவுவண்டி கையளிக்கப்பட்டுள்ளது.

வேரவில் மருத்துவமனைக்கு செல்லும் வீதிகளின் மோசமான நிலையால் மருத்துவமனைக்கு ஒரேயொரு காவுவண்டியே பயன்பாட்டில் இருந்தது. அந்த வண்டி கடந்த பல நாள்களாக பழுதடைந்த நிலையில் திருத்த வேலைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் அவசர நோயாளர்களை மருத்துவமனையிலிருந்து பிற மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது என அப்பகுதி மக்களால் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில் இதுதொடர்பில் புதிய மாகாண சேவைகள் பணிப்பாளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதனையடுத்து நேற்றுமுன்தினம் வேரவில் மருத்துவமனைக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நேரடியாக சென்று களநிலைமைகளை ஆராய்ந்ததையடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் உடனடியாக காவுவண்டி அனுப்பி வைக்கப்பட்டது.

அத்துடன் பழுதடைந்த காவுவண்டியையும் விரைந்து பழுதுபார்க்குமாறும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார். (ச-214)



# வவுனியாவில் வயல் விழா

வவுனியா, செப். 10

வவுனியா, தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஏற்பாட்டில் வயல்விழா வவுனியா ஓயார் சின்னக் குளத்தில் அமைந்துள்ள றோயல் பண்ணையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது "வினைத்திறன் மிக்க தெங்கு உற்பத்தியாளராக மிளிர்வதற்கான பாதை நோக்கிய பயணம்" என்னும் தொனிப்பொருளில் தெங்குச் செய்கை விவசாயிகளுக்கான தெங்குச் செய்கை தொடர்பாக மேலதிக அறிவூட்டல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 40 க்கும் மேற்பட்ட தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு தென்னை நாற்று நடுகை, பசளை வட்டம், சேதனப்பசளை தயாரிக்கும் முறை, நோய் பீடைக் கட்டுப்பாட்டு முறை, தென்னங்கன்றுகளுக்கான நீர்ப்பாசன முறைமை போன்ற களப்பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த 10 தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்புத்தொகையும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா உதவிப் பிரதேசசெயலரும் விருந்தினர்களாக பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயிகள் மற்றும் வவுனியா தென்னை பயிர்செய்கை சபையின் உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14,110)

# கோதுமை மா விலை அதிகரிப்பால் அரிசிமாவுக்கு யாழில் பெரும் மவுசு

யாழ்ப்பாணம், செப். 10

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு என்பவற்றையடுத்து அரிசிமாவுக்கு யாழில் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

கோதுமை மா விலை அதிகரித்ததால் பெரும்பாலோனோர் தற்போது அரிசிமாவைக் கொள்வனவு செய்கின்றனர். இதனாலேயே அரிசிமா பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றது என்று அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ அரிசிமா 270 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்ற அதேவேளை கோதுமை மா ஒரு கிலோ 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-14,17)

*காலபோக நெற்செய்கைக்கு*

# வடக்கு மாகாணத்தில் 29,70,000 லீற்றர் டீசல்



யாழ்ப்பாணம், செப். 10

இந்த ஆண்டு காலபோக நெற்செய்கைக்கென வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகளின் வயல் உழவுத் தேவைக்கு சுமார் 29 லட்சத்து 70 ஆயிரம் லீற்றர் வரையிலான டீசலை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒதுக்கியுள்ளது என்று கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய யாழில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வயல்களை உழுவதற்கு யாழிலுள்ள கம நல சேவை நிலையங்களின் உதவியுடன் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாக இரண்டாம் கட்டமாக டீசல்வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை வயல்காணிகளின் அளவுகளுக்கேற்ப டீசல் வழங்கப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-14,17)

# கஞ்சாவுடன் நபர் கைது!

யாழ்ப்பாணம், செப். 10

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெலிஞ்சிமுனைப்பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெலிஞ்சிமுனைப்பகுதியில் நபரொருவர் கஞ்சாவை உடைமையில் வைத்திருக்கின்றார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார், 2கிராம் கஞ்சாவுடன் 30 வயதான சந்தேகநபரைக் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்கைதிகள் மீது புதிய வழக்குகள் பதிவு!

## விடுதலை வெறும் கண்துடைப்பு நாடகமா? நாடாளுமன்றில் செல்வம் கேள்வி

**யாழ்ப்பாணம், செப். 10**

**தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வெறும் வாய்வார்த்தைகளில் கூறிக்கொண்டு அவர்கள் மீது புதிய வழக்குகள் பதிவுசெய்யப்படுதலானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஏமாற்று வித்தையா? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமூக பாதுகாப்பு வரி தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்கவுரையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தார். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவருடன் சந்திப்பை மேற்கொள்ளும் வேளைகளிலும் அவர்களின் விடுதலையில் அக்கறையுள்ளதாக காட்டிக்கொள்கிறார்.

ஆனால் தற்போது நீதிமன்றத்தால் வழக்குகள் தீர்க்கப்பட்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நிலை உருவாகியுள்ள சமயத்தில் அவர்கள் மீது புதிய வழக்குகள் பதிவுசெய்யப்படுகின்றன.

இந்த ஒருவார காலத்துள் அவர்கள் மீது பல புதிய வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டு 10, 15 வருடங்கள் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் வேளையில் அவர்கள் மீது புதிய வழக்குகளைப் போடுவது சட்டவிரோதமானது.

இப்போது அவர்கள் தம்மை விடுதலை செய்யக்கோரி உணவுதவிர்ப்பில் ஈடுபடுகின்றனர். அவர்களின் விடுதலை ஏமாற்று வார்த்தையாக மாறப்போகின்றதா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே இதுதொடர்பில் ஜனாதிபதி வார்த்தை ஜாலங்களை நிறுத்தி கைதிகள் விடுதலையில் அக்கறை செலுத்தவேண்டும்- என்றார். (ச-22)

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், செப். 10

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் இளைஞரொருவர் ஹெரோய்னை உடைமையில் வைத்திருக்கின்றார் என்று மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 30 மில்லிகிராம் ஹெரோய்னுடன் இளைஞரைக் கைது செய்தனர். அதனையடுத்து இளைஞருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ஓ-14,125)

## ஆலய சமையலறையில் சிலிண்டர் திருட்டு!

சாவகச்சேரி, செப்.10

மீசாலை வடக்கு நடராச வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சமையலறைப் பயன்பாட்டில் இருந்த எரிவாயு சிலிண்டர் நேற்று திருடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை ஆலயத்தின் ஓட்டைப் பிரித்து சமையலறைக்குள் நுழைந்து எரிவாயு சிலிண்டர் திருடப்பட்டது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ஓ-14,159)

## முருங்கைக்காய் விலை 800 ரூபாவாக எகிறியது

சாவகச்சேரி, செப். 10

சந்தைகளில் முருங்கைக்காயின் விலை 800 ரூபாவாக எகிறியது.

இதுவரை காலமும் கிலோ 400 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வந்த முருங்கைக்காய் நேற்று கிலோ 800 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

மழையால் முருங்கை மரத்தில் காணப்பட்ட பூக்கள் உதிர்வடைந்ததால் உற்பத்தி குறைவடைந்துள்ளதென உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (ஓ-14, 9)

## வீதிவிளக்கு ஒளிராமையால் பயணிகள் பெரும் சிரமம்

சாவகச்சேரி, செப். 10

நாவற்குழி ரயில் நிலையத்துக்கு முன்பாக பொருத்தப்பட்டுள்ள வீதி மின்விளக்குகள் இரவு வேளையில் அணைக்கப்படுவதால் இரவுநேரத்தில் ரயிலில் வரும் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் நலன்கருதி நாவற்குழி ரயில் நிலையத்துக்கு முன்பாக ஏ-9 மற்றும் ஏ-32 வீதிகளில் சாவகச்சேரி பிரதேசசபையால் வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. எனினும் அண்மைக்காலமாக இந்த மின்விளக்குகள் இரவு 9 மணிக்குப் பின்னர் அணைக்கப்படுகின்றன. இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-14,9)



## சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 10

வட்டு. மேற்கு அ.மி.த.க.பாடசாலையின் ஆசிரியர் சரோஜா புவனேஸ்வரனின் சேவைநலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் பொ.சிவரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விழாநாயகியும் அவரது கணவரும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்தால் கௌரவிக்கப்பட்டனர். (ஓ-14)

## நினைவுதினமும் நினைவுப்பேருரையும்

யாழ்ப்பாணம், செப். 10

விழிப்புலனற்றோருக்கான வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவுதினமும் நினைவுப்பேருரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகத்திலுள்ள வாழ்வகம் நிலையத்தின் செல்லா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்வகம் நிறுவனத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், நினைவுப்பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறைத்தலைவர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் ஆற்றவுள்ளார். (ஓ-14)



## பயிற்சிப் பட்டறை

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையில் ஒத்துணர்வு பயிற்சிப்பட்டறை கடந்த முதலாம் திகதி மற்றும் இரண்டாம் திகதி ஆகிய தினங்களில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரியின் பீடாதிபதி கு.கமலகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் மலையக பாடசாலை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.முரளிதரன் கலந்துகொண்டார்.

வளவாளர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் எஸ்.முகுந்தன், எஸ்.வாகீஸ்வரன் ஆகியோரும் ஒத்துணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கல்லூரியின் இணைப்பாளர்களான விரிவுரையாளர்கள் எஸ்.சிவகாந்தன், இந்திரா செல்வநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

## சிங்கப்பூர் அமைச்சரை சந்தித்தார் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா

யாழ்ப்பாணம், செப். 10

சிங்கப்பூர் முன்னாள் துணைப்பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினத்தை, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடந்த புதன்கிழமை சிங்கப்பூரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சிங்கப்பூரில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர், சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையிலே வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு தரப்புகளையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறார். அதன் ஒரு பகுதியாகவே வடமாகாண சுகாதாரத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட தமிழ் சிரேஷ்ட அமைச்சரும் சிங்கப்பூரின் முதல் தமிழ்த் துணைப் பிரதமருமான தர்மன் சண்முகரத்தினத்தை சந்தித்தார்.

சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக இடம்பெற்ற சந்திப்பில் வடக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டிய துறைகள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர். அதன்போது வடக்கு சுகாதாரத்துறையை மேம்படுத்த சிங்கப்பூர் அரசாங்கம் தனது காத்திரமான பங்கை வழங்கத் தயாராக இருக்கின்றது என்று அமைச்சர் சண்முகரத்தினம் ஆளுநரிடம் உறுதியளித்தார். அதற்குப் பதிலளித்த வடமாகாண ஆளுநர், சிங்கப்பூர் உறவுகளூடாக வடக்கை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை தயாராக இருக்கின்றது எனத் தெரிவித்தார் என்று ஆளுநர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ-14,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | மறைவு |
|---|---|
| 23 - 10 - 1950 | 09 - 09 - 2022 |



## பிரிதிவிராஜ் சிவரத்தினகௌரி (ராணி)

அன்னசத்திர வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரிதிவிராஜ் சிவரத்தினகௌரி (ராணி) அவர்கள் கடந்த (09.09.2022) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கனடா நேரப்படி நாளை (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை 9.00AM மணியளவில் நடைபெற்று **Ajax crematorium & Visitation centre 384 Finley Avenue Ajax, ON L1S 2E3** கனடாவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

218/4 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
**074 036 1766**


# வங்கப் புலிக்குட்டிகளின் தாய் 'கெல்ல' உயிரிழப்பு

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் பிறந்து கவனமீர்த்த 3 வங்கப் புலிக் குட்டிகளின் தாயான 'கெல்ல' நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது என தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தெஹிவளை மிருகக்கட்சிசாலையில் கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி அகிரா, டுமா மற்றும் லியோ என்ற 3 வங்களாப் புலிக் குட்டிகளை 'கெல்ல' ஈன்றது. இந்தப் புலிக்குட்டிகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தன.

இந்தநிலையில் குறித்த புலிக்குட்டிகளின் தாயான 'கெல்ல' புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தநிலையில் நேற்று உயிரிழந்துள்ளது. 2008ஆம் ஆண்டு சீனாவிலுள்ள சபாரி பூங்காவில் இருந்து விலங்கு பரிமாற்றல் மூலம் தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு 'கெல்ல' கொண்டு வரப்பட்டமை குறிப்பிட்டது. (ச-இ)


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 • 06 • 1939 | 05 • 09 • 2022 |



## அமரர் ஜெகநாதன் தியாகராஜா

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெகநாதன் தியாகராஜா 05.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா, வேதவல்லி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிஐயா, சாயுச்சியம் தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற ரங்கநாயகியின் (லலிதா) ஆருயிர்க் கணவரும், பிரதீபா, ஜனார்த்தனனின் பாசமிகு தந்தையும், லிங்கன், அருளியா ஆகியோரின் அருமை மாமனாரும், ஷயன், ஷாமா, ஜனயா ஆகியோரின் ஆசைப் பாட்டனாரும், விஜயநாதன், விஜயலக்சுமி (விஜி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராதா, திருஞானசம்பந்தர் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை 50, செட்டித்தெரு ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 8 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்படும். 11 மணிமுதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 1.30 மணியளவில் செம்மணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 - 02 - 1939 | 05 - 09 - 2022 |



## திருமதி யோகீஸ்வரி குணசிங்கம்

சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகீஸ்வரி குணசிங்கம் அவர்கள் கடந்த 05.09.2022 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் அதிபர் இராசையா குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கஸ்தூரியார் வளவு வைத்திய சிரோன்மணி பரராஜசிங்கம், நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா பாரிஜாதபுஷ்பம் தம்பதியரின் மூத்த மருமகளும், வத்சலா (இலங்கை) ராஜ்மோகன் (கனடா), கௌசலா (சிங்கப்பூர்), சியாமளா (லண்டன்), பத்மஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தசொரூபன், செல்வஅனுஷாதேவி, அருணன், இராமச்சந்திரன், குகதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இரகுநாதன், கமலாசனி, யோகநாதன், சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆரபி, சௌமியன், அபிரதன், அக்ஷயன், அனுஷியா, அனுருத்தன், சாகரி, சஜன், ரிஷி, நேத்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுகந்தினி, குகன் ஆகியோரின் பெரியம்மாவும், கோபிகா, சாம்பவி, மயூரன், கஸ்தூரி, விநோபா, சோபன், சோபிதா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்பலவாணர், கிருஷ்ணராணி, சிவநாதன் (ஓய்வுபெற்ற அதிகாரி - மின்சார சபை) சுகுணா, கங்கா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (93/21 இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்) நடைபெற்று தகனக்கிரியை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல் : ராஜ்மோகன் (மகன்)**
**0016477181968 (கனடா), 077 152 9148 (இலங்கை)**
**93/21, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.**

(CS 20689) (3/6)



# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 09 - 1977 | 08 - 09 - 2022 |



## சிவசுப்பிரமணியம் சீயோ

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ஆம் ஒழுங்கை 37/42 பிறவுண் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமான சிவசுப்பிரமணியம் சீயோ கடந்த (08.09.2022) வியாழக் கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் மகேந்திரராணி தம்பதியினரின் அன்பு மகனும், வடிவேலு லட்சுமி தம்பதியினரின் மருமகனும், ஞானகௌரியின் அன்புக் கணவரும், அனிக்காவின் அன்புத் தந்தையும், சிவிதாவின் அன்புச் சகோதரனும், தவராசா, யோகேந்திரமலர் ஆகியோரின் பெறா மகனும், திவஸ்திகா, ஹனுஸ்சிகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகதீஸ்வரன், தீபன், தினேஸ், திலீபன் ஆகியோரின் மைத்துனரும், நமசிவாயம், யோகம்மா, சோமசுந்தரம், செல்லம்மா ஆகியோரின் பேரனும், ஜெயக்குமார், சந்திரகுமார், ரவிகுமார், தவகுமார், சிறிகுமார், நந்தகுமார் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**1ஆம் ஒழுங்கை
37/42, பிறவுண் றோட்
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**076 123 1973
077 584 2468**

**தகவல் :
குடும்பத்தினர்**

(CS 20695) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழா, ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெகுசிறப்பாக இடம்பெற்றது. (14,27)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
வடிவாம்பாள் பரராசசிங்கம்
(வடிவக்கா)
முடமாவடி

தோற்றம் 22.04.1939
மறைவு 22.08.2021

நீங்கள் எங்களைப் பிரிந்து
ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் ஞாபகம்
காவியமாக வாழ்ந்திருந்த
உங்களை காலமெல்லாம்
நினைத்திருப்போம்
வாழ்ந்த காலத்தில் உமதருமை
புரியவில்லை எமக்கு
உங்கள் நினைவுத் துளிகள்
விழியோரம் கண்ணீராக
கரைகிறது.

முடமாவடி ஞானவைரவர்
காலடியில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்
கோப்பாய் தெற்கு
கட்டைப்பிராய்.

(CS 20683) (3/6)


## வாய்க்கால் புனரமைப்பு தொடர்பிலான கூட்டம்

சாவகச்சேரி, செப். 10

நுணாவில் மேற்கு விளைவேலி வாய்க்கால் புனரமைப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நுணாவில் மேற்கு துர்க்கை அம்மன் கோயிலருகில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்துக்கு நுணாவில் மேற்குப் பகுதி விவசாயிகள் மற்றும் நலன்விரும்பிகளைக் கலந்துகொள்ளுமாறு கமநலசேவைகள் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ-14,9)



## தேசிய உதைபந்தாட்டப் போட்டிக்கு புங்குடுதீவு மத்திய கல்லூரி தெரிவு

யாழ்ப்பாணம், செப். 10

20 வயதுப்பிரிவு பெண்களுக்கான தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டிக்கு, புங்குடுதீவு மத்திய கல்லூரி அணி முதல் தடவையாகத் தெரிவாகியுள்ளது.

20 வயதுப்பிரிவு பெண்களுக்கான மாகாணமட்ட உதைபந்தாட்டப் போட்டி நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் வவுனியா கனகராயன்குளம் வித்தியாலயத்தை எதிர்த்து ரை பிரேக்கர் முறையில் வெற்றிகொண்டது. இரண்டாவது போட்டியில் கிளிநொச்சி பிரமந்தனாறு வித்தியாலயத்தை எதிர்கொண்டு 2 :0 என்றவாறு வெற்றியீட்டி அரை இறுதிக்குள் நுழைந்தது.

அரை இறுதிப்போட்டியில் வல்வெட்டித்துறை கொற்றாவத்தை வித்தியாலயத்தை எதிர்கொண்ட புங்குடுதீவு மத்திய கல்லூரி அணி ரைபிரேக்கர் முறையில் வெற்றிகொண்டு இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்கொண்டு இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு முதல் தடவையாக புங்குடுதீவு மத்திய கல்லூரியின் பெண்கள் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-14)

# ஐ.நா. சபையின் கண்காணிப்பில் பொதுசன வாக்கெடுப்பைக் கோருக

### தமிழ்த் தரப்புகளுக்கு எம்.கே.சிவாஜிலிங்கம் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், செப். 10**

**இலங்கைக்குள் ஒருபோதும் அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை. தமிழ்த் தரப்புக்கள் இதனை உணர்ந்து கட்சிபேதங்களை உதறி, ஐ.நா. சபையின் கண்காணிப்பில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பொதுசன வாக்கெடுப்பை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்த வேண்டும்.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். வல்வெட்டித்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளக விசாரணைகள் மூலம் இலங்கைக்குள் ஒருபோதும் அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை. அரசமைப்பை உருவாக்கப்போவதாக கூறினாலும் ஒற்றையாட்சியை சுற்றிச் சுற்றி இருக்குமே தவிர [illegible] தீர்வு கிடைக்காது. தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை உள்ளிட்ட போர்க் குற்றங்களுக்கான சர்வதேச நீதியைக் கோரி ஈழத்தமிழினம் தொடர்ந்து போராடி வருகிறது.

இந்தநிலையில் ஜெனிவா கூட்டத் தொடர் நெருங்கும் இவ்வேளையில் தமிழ்த் தரப்புகள் இந்த விடயத்தில் ஒற்றுமையாகச் செயற்பட்டு ஐ.நா. சபையின் கண்காணிப்பில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பொதுசன வாக்கெடுப்பை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்த வேண்டும்.

தமிழ் தரப்புகள் பொது உடன்பாட்டுக்கு வந்து ஒற்றுமையுடன் செயற்பட்டு பொதுசன வாக்கெடுப்பை முன்வைப்பதன் ஊடாகவே அடுத்த கட்டத்தை நோக்கி நாம் நகர முடியும். புலம்பெயர் மக்களும் கலந்துகொள்ளக்கூடிய வகையில் இந்த வாக்கெடுப்பு விடப்படவேண்டும்.

இதனை மக்கள் இயக்கமாக வலியுறுத்தி மாவட்டம் மாவட்டமாகப் பேரணியாகச் செல்லக்கூடிய விதத்தில் மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் குவாட் அமைப்பில் உள்ள அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் சீனாவின் நடவடிக்கையை எதிர்த்து ஈழத் தமிழர்கள் பிரச்சினையை முதன்மைப்படுத்தி செயற்பட வேண்டும் - என்றார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர...

விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை முன்வைத்தே தீரும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரச குழுவிலுள்ள முக்கியஸ்தரான நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சர்வதேச ஊடகம் ஒன்றின் செய்தியாளருக்கு அளித்த செவ்வியின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைச்சாலைகளிலுள்ள தமிழ்க் கைதிகள் (அரசியல் கைதிகள்) தொடர்பில் நல்ல தீர்வு முன்வைக்கப்படும். கைதிகளில் (அரசியல் கைதிகளில்) ஒரு தொகுதியினர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர். காணி விடயம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கும் தீர்வுகள் முன்வைக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி நடத்திய பேச்சின்போது இதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணாமல் புலம்பெயர் தமிழ் மக்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகச் செயற்பட முடியாது என்று தெரிவிக்கப்படும் கருத்துடன் நான் உடன்படுகின்றேன். இலங்கை மீண்டெழ புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளும், ஒத்துழைப்புக்களும் கட்டாயம் தேவை - என்றார். (அ-எ-22)

## கந்தர்மடத்தில்...

உயிரிழந்துள்ளார்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் சரவணபவன் (வயது-32) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் வீதி வளைவில் திரும்ப முற்பட்டபோது கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் மயக்கமுற்ற இவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-எ-125-20-9)

## பெயரளவுப்...

பட்டுள்ளமை சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அறியமுடிகின்றது.

நேற்றுமுன்தினம் பதவியேற்ற 37 இராஜாங்க அமைச்சர்களில் அதிகளவானோர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்களே. இவர்களைவிடவும் பெரமுனவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ளனர்.

இந்நிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இராஜாங்க அமைச்சர்களுக்குரிய வரப்பிரசாதங்கள் பல நிறுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். அது பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அறிய முடிகின்றது.

நேற்றுமுன்தினம் இராஜாங்க அமைச்சர்களாகப் பொறுப்பேற்றவர்கள், தமது இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக கொடுப்பனவு தேவையில்லை என்று தெரிவித்திருந்தபோதும், ஏனைய வரப்பிரசாதங்கள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், அவர்கள் பலர் ஏற்கனவே அந்தந்த அமைச்சுக்களிடம் வாகனங்களைக் கோரியிருந்ததுடன், இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளைக் காண்பித்து தமது வாகன உரிமைகள் மற்றும் அவற்றின் தேவைகள் தொடர்பாக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

அவர்களின் கோரிக்கைக்கு அமைய புதிதாக பதவியேற்றுள்ள 37 இராஜாங்க அமைச்சர்களுக்கு 296 அரசாங்க வாகனங்கள், அதற்கான எரிபொருள் மற்றும் சாரதிகளை ஒதுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில், ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை பெரமுன இராஜாங்க அமைச்சர்களை அதிருப்தியடைய வைத்துள்ளது. (அ-எ-இ)

## முகாமைத்துவ...

திங்கட்கிழமை முதல் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முகாமைத்துவ கற்கைகள் பீட மாணவர்களுக்கு சிறப்பு போக்குவரத்து ஏற்பாடுகள் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அது தொடர்பான அறிவுறுத்தல்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தார்.

எனினும் மாணவர்களுக்கெனத் தனியான போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பான அறிவுறுத்தல் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை தெரிவித்திருந்தது. போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத நிலையில், ஊடகங்கள் ஊடாக அது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதையடுத்து அரச உயர் மட்டங்கள் இந்த விடயத்தில் தலையிட்டு அமைச்சரின் பணிப்புரையை நடைமுறைப்படுத்தநடவடிக்கை எடுத்துள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்துக்கான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வடமராட்சி, தென்மராட்சி ஊடாகவும் குறிப்பிட்ட நேரத்தில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்துக்கு பஸ் சேவைகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தில் இருந்து வணிக பீடத்துக்கு பஸ் சேவை செம்மணி ஊடாகவும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து காலை 7.40 மணிக்கு முகாமைத்துவ பீடம்வரை மாணவர்களுக்கான பஸ் சேவை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சந்நிதி...

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியவர்களிடம் சுமார் 60 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. தங்க நகைகளை பறிகொடுத்த 21 பேர் முறைப்பாடுகள் பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் பங்கேற்றிருந்த நிலையில், அடியவர்களிடம் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். வயதானவர்களிடமே அதிகளவில் நகைகள் திருடப்பட்டுள்ளன.

தங்க நகைகளைப் பறிகொடுத்த 21 பேர் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 60 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதேநேரம் இன்று தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ள நிலையில், அதிலும் அதிகளவான அடியவர்கள் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அடியவர்கள் தமது நகைகள் மற்றும் பணம் என்பன தொடர்பில் அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டுமென்று பொலிஸாரும், ஆலய நிர்வாகத்தினரும் கோரியுள்ளனர். (அ-எ-26)

## பறந்தார்...

பயணமாகியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

சிறிலங்காவில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமான பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளைக் கோரி பொதுமக்களின் நலன் அடிப்படையில் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் சிறிலங்கா நிறுவனம் உட்பட மேலும் மூவரால் கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதி அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவும் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தார். மனுவை விசாரணை செய்த நீதிமன்றம் பஸில் ராஜபக்ச வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்தது.

இந்நிலையில் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளல் உட்படத் தனிப்பட்ட காரணங்களால் பஸில் ராஜபக்ச அமெரிக்கா செல்ல எதிர்பார்த்துள்ளார் என்றும், அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்றும் அவரது சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றில் கோரியிருந்தனர்.

அதைப் பரிசீலித்த பிரதம நீதியரசர் உட்பட ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் கொண்ட ஆயம், எதிர்வரும் ஜனவரி மாதம் 23ஆம் திகதிவரையான காலப் பகுதிகள் பஸில் ராஜபக்ச வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கியது.

இந்நிலையில் பஸில் ராஜபக்ச நேற்றுக் காலை அமெரிக்காவுக்குப் பயணமாகியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

**பணிப்பெண் தேவை**

வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில்
பேசித்தீர்மானிக்கப்படும்.
077 069 8105

**வேலையாள்கள் தேவை**

சாவகச்சேரியில் உள்ள பிரபல
ரெஸ்ரோரன்சுக்கு உணவு
பரிமாறுபவர்கள் தேவை.
(பெண் வெயிட்டர்)
அனுபவம் உள்ளவர்களுக்கு
முன்னுரிமை
சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
077 322 2700

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 - 03 - 1957 | | 08 - 09 - 2022 |



## திருமதி தர்மலிங்கம் இராசமலர்

அளவெட்டி தெற்கு அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் இராசமலர் அவர்கள் 08.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வெள்ளையப்பு சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தவகீஷன் (பிரான்ஸ்), அபிலஷா (மேலதிக மாவட்ட பதிவாளர், பிரதேச செயலகம், காரைநகர்), மீரஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கீர்த்தனா, முகுந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம், கிளிநொச்சி), கௌதம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அலிஷாவின் (ஜேர்மனி) அன்புப் பேர்த்தியும் மாசிலாமணி, சிதம்பரநாதன், பாக்கியநாதன், திருஞானசம்பந்தநாதன், புஷ்பமலர், புனிதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவபாக்கியம், தவராசா, சிவலிங்கம், சரசுவதி, சோதிமலர், அசுவதி, நாகேஸ்வரி, சிவகுமாரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டடிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
076 227 5256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக்கு தடையாகும் சுற்றறிக்கைகளைத் திருத்தப் பணிப்பு

கொழும்பு, செப்.10

அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குச் சுற்றறிக்கைகள் தடையாக இருப்பின், அவற்றை உடனடியாகத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் இந்திய முதலீட்டு அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான இந்தியாவின் பிரதித் தூதுவர் வினோத் ஜேக்கப்பும் கலந்துகொண்டிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி அலுவலக பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, மின்வலு, எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர்.

அதில் ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் அபிவிருத்திக்கு இடையூறாக இருக்குமாயின் அவற்றை உடனடியாக திருத்த வேண்டியதன் அவசியம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய முதலீட்டில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களுக்கு தடையாகவுள்ள விடயங்களை கண்டறிந்து, அவற்றுக்கு உடனடித் தீர்வு வழங்க வேண்டுமென்றும் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (அ-எ-இ)

## போர்க்...

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஜெனிவாவில் வைத்து தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி ஜெனிவாவில் தொடங்கவுள்ளது. இந்த நிலையில், இலங்கையில் போர்க் குற்றம் புரிந்தோரை உலக நாடுகள் இலக்கு வைக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரச குழுவிலுள்ள முக்கியஸ்தரான நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் இது தொடர்பில், சர்வதேச ஊடகம் ஒன்றின் செய்தியாளர் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு இலங்கை அரசின் உத்தியோக பூர்வ பதில் கூட்ட அமர்வில் தெரிவிக்கப்படும். எனினும், உங்கள் (சர்வதேச செய்தியாளர்) கேள்விக்கான பதிலாக, இலங்கை மீது எந்தவொரு தரப்பினரும் போர்க்குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். இதை மீறி எமது நாடு மீது போர்க்குற்றச்சாட்டை எவரும் முன்வைத்தால் அதை ஏற்க நாம் தயாரில்லை.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த போர் முடிவுக்கு வந்ததே பெரிய விடயம். போரின்போது படையினரில் ஒரு சிலர் தவறுகளை இழைத்திருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த படையினர் மீதோ அல்லது நாடு மீதோ போர்க்குற்றச்சாட்டை எந்தத் தரப்பும் முன்வைக்கமுடியாது.

இலங்கை இறைமையுள்ள நாடு. தவறிழைத்த படையினருக்கு எதிரான விசாரணை உள்ளகப் பொறிமுறையூடாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதை விடுத்து சர்வதேசப் பொறிமுறையூடான விசாரணையை இலங்கை அரசு ஒரு போதும் ஏற்கமுடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் இலங்கை ஒன்றிணைந்து செயற்படவே விரும்புகின்றது. போர்க்குற்றச்சாட்டு என்ற விவகாரம் இலங்கையில் இனங்களுக்கிடையில் திரும்பவும் பிளவை ஏற்படுத்தவே வழிவகுக்கும். இந்த விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், அதன் உறுப்பு நாடுகளும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார். (அ-எ-22)

## கோத்தாபய...

மீறல் மனுக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பிரதிவாதியாகக் குறிப்பிடுவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

சீனன்குடா எண்ணெய் தாங்கியை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்காக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள அதிகாரம் வழங்கிய அமைச்சரவைப் பத்திரத்தின் சட்டபூர்வமான தன்மையை சவாலுக்குட்படுத்தி இந்த மனுக்கள் எல்லே குணவன்ச தேரர், பெங்கமுவே நாலக தேரர் மற்றும் வக்முல்லே உதித்த தேரர் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீதான விசாரணை இன்று நடைபெற்ற நிலையில், மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தர்ஷன வெரதுவகே, மனுக்களில் திருத்தத்துக்கு நீதிமன்றத்தின் அனுமதியை கோரினார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தற்போது ஜனாதிபதி பதவியை வகிக்காத காரணத்தால் அவரை தனிப்பட்ட முறையில் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க நீதிமன்றில் அனுமதி கோரினார். இதற்கு உடன்பட்ட நீதிமன்றம் கோத்தாபயவை பிரதிவாதியாக இணைக்க அனுமதி வழங்கியது. இந்த மனுக்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-இ)

## பதவி...

மாகவும், அதிகபட்சவினைத்திறனுடனும் பயன்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அரச செலவினங்களை நிர்வகிப்பதற்கென விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் நேற்றுப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்கள் தமது கடமைகளை மேற்கொள்ளும் போது புதிய விதிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சுக்களுக்கு தனியாக நிதி ஒதுக்கப்படமாட்டாது எனவும் இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலாளர் நியமிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைசார் இராஜாங்க அமைச்சர்கள், பணிகளை இலகுபடுத்த, தனது அமைச்சுக்களில் உள்ள மேலதிக செயலாளர்களில் சிரேஷ்ட அதிகாரியின் உதவியை பெற்றுக்கொள்ளமுடியும். நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்கள் தமது அமைச்சில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர்களைப் பயன்படுத்தியே தமது பணிகளை பூர்த்தி செய்ய வேண்டும். பதவிகளில் புதியவர்களை அமர்த்துவதற்கான கோரிக்கைகளை நிர்வாக சேவைகள் திணைக்களத்திடம் முன்வைக்கக்கூடாது.

அமைச்சரவை அமைச்சர்கள் தற்போது பணி செய்துவரும் அலுவலக வளாகத்துக்குள்ளேயே இராஜாங்க அமைச்சர்களின் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும். இராஜாங்க அமைச்சர்களுடைய பணியாளர் குழாமில் பிரத்தியேகச் செயலாளருக்கு மட்டுமே உத்தியோக பூர்வ வாகன வசதி வழங்கப்படும்.

பிரத்தியேக செயலாளரின் உத்தியோக பூர்வ சாரதியின் மேலதிக நேரம் மற்றும் இதர கொடுப்பனவுகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின்படி கையாளப்படவேண்டும்.

பணியாளர் குழாமின் ஏனைய உறுப்பினர்களுக்காக 2 வாகனங்கள் மட்டுமே ஒதுக்கவேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக அமைச்சுக்கு சொந்தமான ஏனைய வாகனங்களை அதிகாரிகள் பயன்படுத்தக்கூடாது. நிர்வாக உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், அலுவலக உதவியாளர், சாரதி ஆகியோர் நிரந்தர அரச ஊழியர்களாகவே இருத்தல் வேண்டும். அந்த சாரதிகள் மாதாந்தம் மேலதிக நேர கொடுப்பனவாக அதிகபட்சம் 150 மணிநேரத்துக்கான கொடுப்பனவை மட்டுமே பெறமுடியும்.

பிரத்தியேக செயலாளர், ஒருங்கிணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர், மக்கள் தொடர்பு அதிகாரி ஆகியோருக்கு குறைந்தபட்ச தொலைத் தொடர்பு கொடுப்பனவு வழங்கமுடியும். இதில் இணையப் பயன்பாடு, சர்வதேச தொலைபேசிக் கட்டணம், மாதாந்த நிலையான கட்டணம், வரிகள் உட்பட ஏனைய கட்டணங்களும் இவற்றில் உள்ளடங்கும். உதவி ஊழியர்களுக்கு அரச செலவில் தொலைபேசிக் கட்டணங்கள் வழங்கப்பட மாட்டாது போன்ற விதிமுறைகள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

CA/01/17/01 மற்றும் அரச செலவு நிர்வாகம் என்ற தலைப்பில் மே 14, 2010 அன்று வெளியிடப்பட்ட கடிதங்கள் மற்றும் அவ்வப்போது திருத்தங்களுடன் வெளிவந்த கடிதங்களில் உள்ள விதிகள் என்பவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டு புதிய பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதி செயலாளரால் இந்தப் பரிந்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ-இ)

## யூரியூப்...

இணைய ஊடகத்தின் பணியாளர்களான டிவினியா மற்றும் விமல்ராஜ் ஆகியோருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்று நேற்றுப் பிணை அனுமதி வழங்கியது.

இவர்கள் இருவரும் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 17 மாதங்களாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர்னோல்ட் பிரியந்தன், தர்மராஜா பிரிந்தா சந்திரகேசின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வாதங்களை மன்றில் முன்வைத்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைத் தடுத்து வைத்து விசாரணை செய்வதாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் மட்டுமே விசாரணை செய்ய முடியும். ஆனால் அந்த தடுப்புக் காவல் உத்தரவு நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 6 (1)இன் கீழ் எவரேனும் கைது செய்யப்படுவதாயின் ஆகக்குறைந்தது பொலிஸ் பரிசோதகரின் எழுத்துமூலமான அனுமதியுடனேயே கைது செய்யப்பட வேண்டும். ஆனால், அந்தச் சட்ட நடைமுறை இந்தக் கைது நடவடிக்கையில் பின்பற்றப்படவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி தனது வாதத்தில் சுட்டிக்காட்டினார்.

வாதங்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான், சட்டமா அதிபர் பிணை மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்காத நிலையில், இருவரையும் 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார். அத்தோடு பிணையில் விடுவிக்கப்பட்ட இருவரும் வெளிநாடுகளுக்குச்செல்லவும்தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சுகாதார...

பணிப்பாளர் நியமனம் தொடர்பாகத் தன்னுடன் கலந்துரையாடப்படவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாணத்தில் இந்தப் பதவிக்குத் தகுதியானவர்கள் உள்ள நிலையில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், பலத்த அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் வினவியபோதே, வடக்கு ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனம் தொடர்பாக சுகாதார அமைச்சு என்னுடன் கலந்துரையாடவில்லை. நியமனம் வழங்கப்பட்ட பின்னரே அது தொடர்பில் அறிந்துகொண்டேன். தற்போது வெளிநாடு ஒன்றில் உள்ளதால் இங்கு வந்த பின்னர் துறைசார்ந்த அமைச்சருடன் இது தொடர்பில் பேசுவேன் என்று வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார். (அ-எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியசக்தி மூலமான மாற்றுவலுத் திட்டம்

## முல்லையில் ஆரம்பம்



முல்லைத்தீவு, செப். 10

யு.என். ஹெபிடாட் நிறுவனத்தின் பசுமைக்கட்ட திட்டத்தின் கீழ், சூரிய சக்தி மூலமான மின்சக்தித் திட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச்செயலர் க.விமலநாதனால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது மாவட்டச்செயலர் தெரிவித்ததாவது:-

மாற்று வலு சக்தியை வழங்கி பசுமைச் சூழலை உருவாக்கும் திட்டத்தின் கீழ், சூரிய மின்தகடு வழங்கும் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருண்மியம் நலிந்த 165 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சூரிய மின் தகட்டுடன் அடுப்பும் வழங்கப்படவுள்ளது. மேலும் 30 பொது இடங்களுக்கு சூரிய மின்தகடு வழங்கப்படவுள்ளது. தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பாக பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு தொடர்ந்து தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைசார்ந்த பயிற்சி பெற்றவர்களால் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும். இது அவர்களுக்கான பயிற்சி காலத்தில் பகுதிநேர வேலை வாய்ப்பாகவும் அமையவுள்ளது -என்றார். (ம-14-19)



சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் திருமதி கிரிஜா வாசுதேவனின் சேவை நயப்பு விழா, கொடிகாமத்தில் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ய-159)



கொடிகாமம் - மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயத்தில், பாடசாலை அதிபர் யேசு தாஸ் தலைமையில் அண்மையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ய-159)

**தவறவிடப்பட்டுள்ளது**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கறுப்பு நிற பையினுள் சான்றிதழ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 717 2715**

**வீடு வாடகைக்கு தேவை**

கொக்குவில்/ஆறுகால்மடம்/ ஆனைக்கோட்டை பகுதிகளை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை

**077 550 0444**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும். வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **077 6585 999**, **076 4365 814**, **077 8748 135**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **076 755 8606**, **077 911 6983**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.